
# நீரேந்துப் பிரதேசம்




★ எங்கள் அலுவலகம் Thorncliffe Park Community Hub 45 Overlea Blvd., Unit 200 Toronto, ON M4H 1C3 இன் உள்ளே அமைந்துள்ளது

தயவுசெய்து நுழைவாயில் 6-ஐப் பயன்படுத்தி, நகரும் படிக்கட்டு அல்லது மின்னுயர்த்தி மூலம் இரண்டாம் மாடிக்கு வரவும்.

# உள்வாங்கல் அழைப்பு

உங்களுக்குச் சட்டத் தகவல்கள் அல்லது சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், தயவுசெய்து எங்கள் உள்வாங்கல் இலக்கத்தை அழைக்கவும்:

**416-441-1764 நீட்சி. 1**

தயவுசெய்து ஒரு செய்தியை விட்டுச் செல்லுங்கள், நாங்கள் 3 வேலை நாட்களுக்குள் பதிலளிப்போம். எங்கள் வேலை நேரங்கள் பற்றிய இற்றைப்படுத்தல்களுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும். எங்கள் வேலை நேரங்கள் மாற்றமடையலாம். www.DonValleyLegal.ca

# ஆவணச் சேவைகள்

நாங்கள் சத்தியக் கடதாசிகள், நொத்தாரிசால் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள் போன்ற வரையறுக்கப்பட்ட ஆவணச் சேவைகளை வழங்குகிறோம். சந்திப்பு நேரத்தை முன்பதிவு செய்ய அழைக்கவும்.

**416-441-1764 நீட்சி. 1**

# தொடர்பில் இருங்கள்

facebook.com/DonValleyCLS

@donvalleycls

தொலைநகல்: 416- 441- 0269

**எங்கள் சேவைகள் அந்தரங்கமானவை**

**தனியுரிமை மதிக்கப்படும்**

**புகைப்பட அடையாள அட்டை தேவை**

Tamil

## Don Valley
## Community Legal Services

**Thorncliffe Park Community Hub**
**45 Overlea Blvd, Unit 200**
**Toronto, ON M4H 1C3**

## உள்வாங்கல் அழைப்பு
## 416-441-1764 நீட்சி. 1

**www.DonValleyLegal.ca**

# எங்களைப் பற்றி

டொன் வெளி கொமியூனிட்டி லீகல் சேர்விசஸ் (DVCLS) என்பது லீகல் எய்ட் ஒன்டாரியோவால் நிதியளிக்கப்படும் ஒரு சமூக சட்டக் கிளினிக் ஆகும்.

2019-ஆம் ஆண்டில், முன்னாள் ஃபிளெமிங்டன் கொமியூனிட்டி லீகல் சேர்விசஸ், ஈஸ்ட் டொரண்டோ கொமியூனிட்டி லீகல் சேர்விசஸ் என்பவற்றை ஒருங்கிணைத்து DVCLS உருவாக்கப்பட்டது.

எங்கள் நீரேந்துப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு, சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவுகளில் **இலவச** சட்டத் தகவல்களையும் சட்ட ஆலோசனைகளையும் நாங்கள் வழங்குகிறோம்.

நாங்கள் பொதுச் சட்டக் கல்வியும் (PLE) வழங்குவதுடன், சமூக அபிவிருத்தி முயற்சிகள், சட்டச் சீர்திருத்தம் மற்றும் ஆதரவு திரட்டல் பணிகளிலும் பங்கேற்கிறோம்.

எங்கள் அங்கத்தவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும், ஒரு சமுதாய மட்ட பணிப்பாளர் சபையினால் எமது நிறுவனம் நிர்வகிக்கப்படுகிறது.

நீங்கள் சட்டத் தகவல்கள் அல்லது சட்ட ஆலோசனைகள், சத்தியக் கடதாசிகள் அல்லது நொத்தாரிசால் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள் ஆகியவற்றைப் பெற விரும்பினால், தயவுசெய்து எங்கள் உள்வாங்கல் இலக்கத்தை அழைக்கவும்:

**416-441-1764 நீட்சி. 1**

**ஒரு சமுதாய சட்டக் கிளினிக் என்ற வகையில், எங்கள் சேவைகள் இலவசமானவை.***

*இருப்பினும், நீதிமன்றக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள், மருத்துவச் செலவுகள் போன்றவை தொடர்பான சில செலவுகள் ஏற்படக்கூடும், அவை தொடர்பில் உங்கள் வழக்குப் பணியாளருடன் கலந்துரையாடப்படும்.

LEGAL AID ONTARIO
AIDE JURIDIQUE ONTARIO

**எங்களால் பின்வரும் சட்டப் பிரிவுகளில் சட்ட ஆலோசனையும் உதவியும் வழங்க முடியும்:**

### வீட்டுவசதிச் சட்டம்

- வெளியேற்றத் தடுப்பு, சட்டவிரோதப் பூட்டுதல்கள், மற்றும் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்
- நாங்கள் குடியிருப்பாளர் மற்றும் வீட்டுவசதி விண்ணப்பங்களுக்கு உதவுவதில்லை, நாங்கள் AGI-களின் பிரதிநிதிகளாகச் செயற்படுவதில்லை

### வேலைவாய்ப்புச் சட்டம்

- வேலைவாய்ப்புத் தரநியமங்கள், வேலைத்தள மனித உரிமைகள், முறையற்ற பணிநீக்கம், வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள், வேலைவாய்ப்புக் காப்புறுதி, பணிநீக்கத் தொகை மீளாய்வுகள்

### குடிவரவுச் சட்டம்

- நிரந்தர வதிவு விண்ணப்பங்கள், வேலை அனுமதிகள், தற்காலிக வதிவு அனுமதிகள், நிரந்தர வதிவு அட்டை, குடியுரிமை விண்ணப்பங்கள்

### வருமான ஆதரவுகள்

- ODSP, OW, CPP, OAS, GIS, CDB
- விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய நாங்கள் உதவுவதில்லை

எங்களால் சட்ட ஆலோசனை அல்லது பிரதிநிதித்துவம் வழங்க முடியுமா என்பது, உங்கள் சட்டப் பிரச்சினைக்குத் தேவைப்படும் நிபுணத்துவம், உங்கள் வழக்கின் தகுதிகள், கிடைக்கக்கூடிய வளங்கள் போன்ற பல காரணிகளைப் பொறுத்ததாகும்.

**நாங்கள் பின்வரும் துறைகளில் உதவுவதில்லை, ஆனால் எங்களால் பரிந்துரைகளை வழங்க முடியும்:**

- துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறை
- குற்றவியல் சட்டம்
- கடன் மற்றும் நுகர்வோர் உரிமைகள்
- குடும்பச் சட்டம்
- பிரெஞ்சு மொழி உரிமைகள்
- ஆரோக்கியம் மற்றும் அங்கவீனம்
- வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட உதவியாளர்களின் உதவி
- அகதிகள் சட்டம்
- குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள்
- நியாய சபைகள் மற்றும் நீதிமன்றங்கள் (நாங்கள் கையாளாத சட்டப் பரப்புக்களில்)
- உயில்கள் மற்றும் அட்டர்னி தத்துவங்கள்

# எங்களுடன் இணைந்து செயற்படுதல்

நாங்கள் சேவைகளை வழங்கும் சமுதாயங்களை எங்களுடன் தொடர்புபடுத்துவதில் எங்கள் சட்டக் கிளினிக் அங்கத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். உங்கள் கருத்துக்களையும் குரலையும் வரவேற்கிறோம்! அங்கத்தவர்கள் எங்களது பல்வேறு குழுக்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளலாம். அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் எங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

டொன் வெளி கொமியூனிட்டி லீகல் சேர்விசஸ் அமைப்பில் இலவசமாக அங்கத்துவம் பெறலாம். நீங்கள் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியவராகவும் மற்றும்/அல்லது கிளினிக்கின் நீரேந்துப் பிரதேசத்தில் வசிப்பவராகவும் இருப்பது கட்டாயமானது. எங்கள் தொலைநோக்குக் கூற்றையும் (எங்கள் இணையதளத்தில் உள்ளது) நீங்கள் ஏற்க வேண்டும்.

அங்கத்துவம் பெறுவதற்கு, எங்கள் உறுப்பினர் படிவத்தை இணையவழியில் பூர்த்தி செய்யுங்கள், அல்லது மேலும் தகவல்களுக்கு 416-441-1764 நீட்சி 22 என்ற இலக்கத்தின் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

www.DonValleyLegal.ca/members

# சமுதாய அபிவிருத்தி

நாங்கள் சமுதாய அபிவிருத்தி முயற்சிகளில் பங்கேற்கிறோம், சமுதாய நிகழ்வுகளில் கலந்துகொள்கிறோம், இலவச பொதுச் சட்டக் கல்வி (PLE) அமர்வுகளையும் செயலமர்வுகளையும் நடாத்துகிறோம்.

மேலும் தகவல்களுக்கு எங்கள் சமுதாய அபிவிருத்திப் பணியாளர்களைத் தொடர்பு கொள்ளவும்.

416-441-1764 நீட்சி 22 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.